மட்/ ககு/ பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) – 2020

இரண்டாம் அத்தியாயம் (எடுப்புக்கள்)

மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01. பொதுவாக எடுப்பு என்று கொள்ளப்படுவது

1. வாக்கியத்தின் விபரிப்பு அர்த்தம்
2. அர்த்தமற்ற வாக்கியம்
3. கட்டளை
4. ஆச்சரியம்
5. எழுவாய், பயனிலையை பதங்களை மட்டும் கொண்ட வாக்கியம்

02. அர்த்தத்தின் வழியே பொருத்தப்பாடில்லாத வாக்கியமாக அமைவது

1. எல்லா குழந்தைகளும் நுண்ணறிவாளர்கள்
2. குழந்தைகள் நுண்ணறிவாளர்கள்
3. குழந்தையொன்று இருக்குமாயின் அது நுண்ணறிவுடையது
4. எந்தவொரு குழந்தையும் நுண்ணறிவில்லாதவரல்லர்
5. ஒரு குழந்தையைத் தவிர ஏனைய எல்லா குழந்தைகளும் நுண்ணறிவுடையவை

03. மனிதர் மட்டுமே சிரிப்பவர் ஆவர் என்ற எடுப்பின் சரியான பதார்த்த வடிவம்

1. யாரேனும் மனிதர் ஆயின் அவர் சிரிப்பர்
2. எல்லா மனிதரும் சிரிப்பவர் ஆவர்
3. எந்த சிரிப்பவரும் மனிதர் அல்ல
4. எல்லா சிரிப்பவரும் மனிதர் ஆவர்
5. சில சிரிப்பவர் மனிதர்

04. நிறை மறை எடுப்பொன்றின் எழுவாய், பயனிலையின் வியாப்தி நிலை முறையே

1. வியாப்தி, வியாப்தியற்றது
2. வியாப்தி, வியாப்தி
3. வியாப்தியற்றது, வியாப்தியற்றது
4. வியாப்தி நிலையை அறிய முடியாது
5. வியாப்தியற்றது, வியாப்தி

05. ஒரு மாணவனைத் தவிர ஏனைய எல்லோரும் திறமையானவர் எனும் எடுப்பின் வியாப்தி நிலை

1. எழுவாய், பயனிலை இரண்டும் வியாப்தியற்றது
2. எழுவாய் வியாப்தி, பயனிலை வியாப்தியற்றது
3. எழுவாய் வியாப்தியற்றது, பயனிலை வியாப்தி
4. எழுவாய், பயனிலை இரண்டும் வியாப்தி
5. வியாப்தி நிலை அற்றது

06. அவன் கண்டியில் பிறந்தான் அல்லது கல்லடியில் பிறந்தான் என்பது

1. அறுதி எடுப்பு
2. வல்லுறழ்வு
3. நிபந்தனை எடுப்பு
4. மெல்லுறழ்வு
5. தனி எடுப்பு

www.lkedu.lk

07. நிபந்தனை எடுப்பொன்று பொய்யாவது

1. முற்கூற்று பொய்யாகின்றபோது மட்டும்
2. பிற்கூற்று பொய்யாகின்றபோது மட்டும்
3. ஒருங்கே முற்கூற்றும், பிற்கூற்றும் உண்மையாக அமைகின்றபோது
4. முறையே முற்கூற்றும், பிற்கூற்றும் பொய்யாக அமைகின்றபோது
5. முற்கூற்றினதும், பிற்கூற்றினதும் உண்மைப்பெறுமானம் தீர்மானிப்பது சாத்தியமில்லை

08. குறைந்தபட்சம் ஒரு மாணவனாவது பாடசாலைக்கு வருவான் என்பது

1. நிறைவிதி எடுப்பு 2. நிறைமறை எடுப்ப 3. குறைவிதி எடுப்பு
4. தனியெடுப்பு 5. குறைமறை எடுப்பு

09. சிங்கம் ஒரு விலங்கு ஆகும் என்ற எடுப்பு பாரம்பரிய நோக்கிலும், நவீன நோக்கிலும் முறையே

1. தனிவிதி, நிறைவிதி 2. நிறைவிதி, தனிவிதி 3. குறைவிதி, தனிவிதி
4. தனிவிதி, குறைவிதி 5. தனிமறை, நிறைமறை

10. அவதானத்திற்குள்ளான எல்லா மலர்களும் மணம் வீசும். என்பது

1. A எடுப்பு 2. E எடுப்பு 3. I எடுப்பு
4. O எடுப்பு 5. தனி எடுப்பு

www.lkedu.lk